R 3007 (page 138)

# உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக!

## THY WILL BE DONE

என் தேவனே, உமது சித்தமே, என்னுடையது அல்ல,
உமது சித்தமே செய்யப்பட வேண்டுமே. உமது அன்பு
எனக்காக எத்தகைய பாதையைத் தெரிந்தெடுத்துத் தந்தாலும்,
பாலைவனத்தினூடேயானாலும், மணற்பாங்கான
பகுதியிலானாலும், கடலுக்கு அருகிலே இருந்தாலும்,
உம்முடைய சித்தமே செய்யப்படவேண்டுமே.

உம்முடைய சித்தம் என்னிலே நிறைவேற்றப்படவேண்டுமே,
அறுவடைவேலை எனக்குக் கொடுக்கப்படுவது
உமது சித்தமானால், அல்லது நான் பாடுபடவேண்டும் என்பது
உமக்கு சித்தமானால், உம்முடைய சித்தம் செய்யப்படவேண்டுமே.

என் தந்தையே, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக!
நான் குடிப்பதற்காக நீர் இனிமையான பாத்திரம் அளித்தாலும்,
நான் குடித்திடுவேன், உம்மைப் புகழ்ந்திடுவேன்,
அது கசப்பானதாய் இருந்தால் நான் சுருங்கிட மாட்டேன்,
அருந்திடுவேன், உம்மைப் புகழ்ந்திடுவேன், உம்முடைய சித்தம்
செய்யப்படுவதாக!

என்றென்றைக்கும் உம்முடைய சித்தம் செய்யப்படவேண்டுமே,
நான் தெரிந்தெடுக்கமாட்டேன், உம்முடைய பொறுப்பிலேயே
எல்லாவற்றையும் விட்டுவிட்டேன், யாத்திரை மிகவும்
குறுகியதானாலும், நெடும்தூரப் பயணமானாலும்
உம்முடைய சித்தம் மட்டுமே செய்யப்படவேண்டுமே!